# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR
# DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.280/2022 | Village | : | ஏகௌரியம்மன் நகர், வல்லம் |
| Prosecution witness | : | PW-3 | Taluk | : | தஞ்சாவூர் |
| Name | : | திருமதி லீமா ரோஸ் | Occupation | : | வீட்டு குடித்தனம் |
| Husband Name | : | திரு. மரியபிரான்சிஸ் | Age | : | 60 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 09.06.2026.**

A1 abated. A2, A3, A4 present.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் வல்லம் ஏகௌரியம்மன்நகர் வல்லத்தில் வசித்து வருகிறேன். வெல்டிங் வேலை செய்துவருகிறேன் சாட்சி 1 என் கணவர், சாட்சி 2 எனது மகன்.2014 வருடம் ஒருநாள் இரவு 10 மணிக்கு இரண்டு வண்டியில் நான்கு பேர் வந்தார்கள். அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. பின் பக்கம் அரிவாள் வைத்திருந்தார்கள். அசிங்கமாக பேசினார்கள். ரூபியை போய் மிரட்டினீர்களா என்று கேட்டார்கள். என் கணவர் அன்று ஊரில் இல்லை. வெளியில் போய்விட்டு இரவு 10 மணிக்குதான் வந்தார். என் கணவர் சாப்பிட உட்கார்ந்தவர் சத்தம் கேட்டதும் வெளியில் போனார். ரூபியை மிரட்டினீர்களா என்று கேட்டார்கள் அதற்கு அவர் நான் ஊருக்குபோய்விட்டு இப்போதுதான் வந்தேன் என்று சொன்னார். பின்பு நீங்கதான் ரூபியை மிரட்டினீர்கள் என்று சொன்னார்கள் காலையில் வாங்க எனது மகன் செசு, டேவிட் தங்கபிரகாசம் ஆகியோர் இருப்பார்கள் அவருடன் பேசிகொள்ளலாம் என்று சொன்னார்கள். இப்ப கதையை முடிக்கதான் வந்தோம் என்று சொல்லி என் கணவரின் தலையில் வெட்டு கையில் வெட்டு எனது மகனின் முதுகில் வெட்டிவிட்டார்கள். பக்கத்தில் உள்ளவர்கள் போலிசிற்கு போன் செய்தார்கள் இரத்தம் ஊத்தியது . ஆம்புலன்சில் மருத்துமனைக்கு போனோம். போலிஸார் பின்பு வந்து விசாரித்தார்கள் நடந்தததை சொன்னேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.06.09 15:04:22 +0530

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.